**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8082881

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : தூத்துக்குடி
மாவட்டம்
PS: லஒ.துறை தூத்துக்குடி
காவல்நிலையம்
Year: 2023
ஆண்டு
FIR No. 06/2023
மு.த.அ. எண்
Date: 02.11.2023
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள் 01.11.2023
Date from :
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period
நேர அளவு தேதிமாலை 16.50 மணிக்கு முன்பாக
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.11.2023
Time : 14.00 மணி
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 02.11.2023
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 15 கி.மீ கிழக்கு
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி — பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அலுவலகம், கட்டட (க&ப) கோட்டம், தூத்துக்குடி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. த. ஜெயகிருஷ்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality :
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் தலைமை உதவியாளர்
(g) Address :
முகவரி — சார் ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. K. Vasudevan, aged 58/2023, S/o. Tr. G. Kumarasamy, Assistant, O/o the Executive Engineer, Public Works Department, Buildings (C&M) Division, Thoothukudi and 5 others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.சுதா........ Rank காவல்ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ....................................காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 2/11/2023 [signature] 2.11.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. PETER PAUL DURAI
Dy. Supdt. of Police,
VK&E Moolakarudi Detachment

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.11.2023 at 15.00 hrs

Name: பெயர் ........................
Rank: நிலை ........................ No. எண் .........

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2023, பிரிவு 7 of PC Act. 1988 as Amended in 2018 and 102 Cr.P.C – ன் தொடர்ச்சி.**

**எதிரிகள் :**

1. Tr.K.Vasudevan, aged 58/2023,
   S/o Tr.G.Kumarasamy,
   Assistant,
   O/o the Executive Engineer,
   Public Works Department,
   Buildings (C & M) Division,
   Thoothukudi.

2. Tr.V.Tambiran Thozhan,
   aged 50/2023,
   S/o Tr.Veerabhagu,
   Executive Engineer,
   Public Works Department,
   Buildings (C & M) Division,
   Thoothukudi.

3. Tr.A.L.Sundaresan, aged 44/2023,
   S/o Tr.Arunachalam,
   Senior Draughting Officer,
   O/o the Executive Engineer,
   Public Works Department,
   Buildings (C & M) Division,
   Thoothukudi.

4. Tmt.K.Ganga Parameswari, aged 57/2023,
   W/o Tr.Bharathi,
   Assistant Executive Engineer,
   O/o the A.E.E., PWD,
   Buildings (C & M) Sub Division No.1,
   Thoothukudi.

**Private Individurals :**

5. Tr.P.Murugesh Kumar, aged 44/2023
   S/o Tr.S.Palaish,
   No.214G/5A, Poonthotta Theru,
   Sankar Nagar,
   Thalaiyuthu, Tirunelveli District.

6. Tr.Joseph Chandrasekar,
   aged 64/2023,
   No.56B/1, 10th Street,
   Tooveepuram, Thoothukudi.

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

தூத்துக்குடி தமிழ்சாலையில் பழைய மாநகராட்சி அலுவலகம் அருகே கதவு எண். 1/J-ல் இயங்கி வரும் தூத்துக்குடி பொதுப்பணிகள் துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ள செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரிந்து வரும் உதவி செயற்பொறியாளர் மற்றும் அலுவல்க ஊழியர்கள் தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறையால் அரசு திட்டங்களை ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்தும்போது அந்த ஒப்பந்த பணிகளை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவதற்கும், ஒப்பந்த பணிகள் முடிவுற்ற பின் அதற்குரிய பணப்பட்டுவாடா செய்வதற்கும் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 01.11.2023-ம் தேதி மாலை 16.50 மணி முதல்

02.11.2023-ம் தேதி அதிகாலை 01.00 மணி வரை மேற்படி அலுவலகத்தை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.த.ஜெயகிருஷ்ணன், தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர்), சார் ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.த.ஜெயகிருஷ்ணன் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 02.11.2023-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது மதியம் 14.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2023, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 and 102 Cr.P.C-ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் திரு.த.ஜெயகிருஷ்ணன், தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர்), சார் ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி தமிழ்சாலையில் பழைய மாநகராட்சி அலுவலகம் அருகே கதவு எண். 1/J-ல் இயங்கி வரும் தூத்துக்குடி பொதுப்பணிகள் துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ள செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரிந்து வரும் உதவி செயற்பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறையால் அரசு திட்டங்களை ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்தும்போது அந்த ஒப்பந்த பணிகளை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவதற்கும், ஒப்பந்த பணிகள் முடிவுற்ற பின் அதற்குரிய பணப்பட்டுவாடா செய்வதற்கும் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 01.11.2023-ம் தேதி மாலை 16.50 மணி முதல் 02.11.2023-ம் தேதி அதிகாலை 01.00 மணி வரை மேற்படி அலுவலக வளாகத்தினுள்ள அமைந்துள்ள செயற்பொறியாளர் அலுவலகம், வரைவு பிரிவு அலுவலம், உதவி

செயற்பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றை தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின்போது செயற்பொறியாளர் அலுவலகத்தின் உள்ளே இருந்த திரு.கு.வாசுதேவன், உதவியாளர் என்பவரது வலது பக்க முன்புற பேண்ட் பாக்கெட்டினுள் மூன்று ரூ.500/- கட்டுகளாக காணப்பட்ட ரூ.1,28,000/- மற்றும் அவருக்கு அருகில் அவர் பயன்படுத்தி வரும் அலுவலக மரக் கப்போர்டினுள் ஒரு காக்கி கலர் கவரினுள் இரண்டு ரூ.500/- கட்டுகளாக ரூ.1,00,000/- ஆகியவை காணப்பட்டது. மேற்படி பணம் ரூ.2,28,000/- குறித்து திரு.கு.வாசுதேவனிடம் விளக்கம் கேட்க அவர் தனது உயரதிகாரியான செயற்பொறியாளர் திரு.தம்பிரான் தோழன் அவர்கள் ஒரு ஒப்பந்ததாரர் அளிக்கும் பணத்தை வாங்கி வைத்திருக்கும்படி சொன்னதன் பேரில் தான் மேற்படி ரூ.1,28,000/- ஐ வாங்கி வைத்திருப்பதாகவும், மேலும், மற்றொரு பணமாகிய ரூ.1,00,000/- ஐ தனது உயரதிகாரியான செயற்பொறியாளர் திரு.தம்பிரான் தோழன் அவர்கள் தன்னிடம் கொடுத்து வைத்திருக்கும்படி சொன்னதன் பேரில் தான் வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.2,28,000/- ஆனது ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி ரூ.2,28,000/- மற்றும் காக்கி கலர் கவர் ஒன்று ஆகியவை மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தின் முதல் தளத்தில் கண்ணாடி அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த திரு.அ.ல.சுந்தரேசன், முதுநிலை வரைதொழில் அலுவலர் என்பவரது பேண்ட் பாக்கெட்டில் தனியாக ரூ.500/- நோட்டுகளாக ரூ.14,000/- காணப்பட்டது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி ரூ.14,000/- மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி செயற்பொறியாளர் அலுவலக வாசலின் அருகே நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவரான திரு.பா.முருகேஷ்குமார் த/பெ.பாலையா, 214G/5A, பூந்தோட்டதெரு, சங்கர்நகர், தாழையூத்து, திருநெல்வேலி மாவட்டம் என்பவரது பின்புற பேண்ட் பாக்கெட்டில் மணிபர்சினுல் ரூ.13,000/- காணப்பட்டது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததாலும் மேற்படி தொகை ரூ.13,000/- செயற்பொறியாளர் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கருதி ரூ.13,000/- மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி

செயற்பொறியாளர் அலுவலக வளாகத்தினுள் அமைந்திருந்த பொதுப்பணிகள் துறை, கட்டட (க & ப) உபகோட்டம்-1 உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தினுள் உதவி செயற்பொறியாளர் இருக்கையில் அமர்ந்திருந்த உதவி செயற்பொறியாளர் திருமதி.கி.கங்கா பரமேஸ்வரி என்பவரை காவல் உதவி ஆய்வாளர் திருமதி.அனிதா அவர்கள் மூலம் சோதனை செய்த போது அவரது கைப்பையினுள் தனியாக ரூ.500/- நோட்டுகளாக ரூ.7,500/- காணப்பட்டது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி ரூ.7,500/- மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தினுள் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.ஜோசப் சந்திரசேகர் எண்.56பி/1, 10வது தெரு, டூவிபுரம், தூத்துக்குடி என்பவரது சட்டையின் இடது புற வெளிப்பாக்கெட்டில் கத்தையாக ரூ.500/- நோட்டுகளாக ரூ.25,000/- காணப்பட்டது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததாலும் மேற்படி தொகை ரூ.25,000/- செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கருதி ரூ.25,000/- மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தினுள் காலியாக இருந்த இருக்கையின் முன்புறமுள்ள மேஜை டிராயரினுள் ரூ.500/- நோட்டுகட்டாக ரூ.50,000/- காணப்பட்டது. .இந்த பணம் பற்றி அந்த அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திருமதி.து.செல்வி என்பவரிடம் கேட்ட போது மேற்படி இருக்கை திரு.ஆவுடையப்பன் என்ற முருகன் என்பவருடையது என்றும் அவர் இன்று (01.11.2023) ஒரு நாள் மட்டும் தற்செயல் விடுப்பு என்றும் கூறினார். மேலும் மேற்படி பணம் ரூ.50,000/- குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார். மேற்படி பணத்திற்கு அந்த அலுவலகத்தில் இருந்த யாரும் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் மேற்படி பணம் ரூ.50,000/- லஞ்சப்பணம் என்று கருதி ரூ.50,000/- மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. எனவே சந்தேகப்படும்படியாக இருந்த தொகை ரூ.3,37,500/- (Rs.1,28,000/- + 1,00,000/- + 14,000/- + 13,000/- + 7,500/- + 25,000/- + 50,000/- =) ஆனது லஞ்சப்பணம் என்று கருதி கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு தயார் செய்யப்பட்ட செயல்முறைகளையும் அலுவலகத்தில் வைத்து

(1.)திருமதி.மு.ஆனந்தி (2.)திரு.கா.பெரும்படையான், (3.)திரு.சு.சொர்ணமோகன், (4.)திரு.க.கருப்பையா, (5.)திரு.ந.கணேஷ், (6.)திருமதி.கி.சிவரஞ்சனி, (7.)திரு.சு.சங்கரநாராயணன், (8.)திரு.கு.வாசுதேவன், (9.)திரு.ஆ.சிங்காரவேல், (10.)திருமதி.ஆ.சாந்தி, (11.)திரு.ர.மாரிமுத்து, (12.)திரு.தி.சோமசுந்தரம், (13.)திருமதி.பா.முத்துசெல்வி, (14.)திருமதி.ஜெ.சுகுனா, (15.)திருமதி.சி.சித்ரா, (16.)திருமதி.மு.பாகம்பிரியாள், (17.)செல்வி.ஆ.சொர்ணரேகா, (18.)திருமதி.பி.ரத்னகலா, (19.)திரு.சு.சுஜித், (20.)திரு.சு.ஜெயவிஷ்வநாத் தினேஷ், (21.)திரு.ஆ.கேப்ரியல் ஜோசப் கிங்ஸ்டன், (22.)திரு.அ.ல.சுந்தரேசன், (23.)திரு.பா.முருகேஷ்குமார், (24.)திரு.ஜெ.நாகராஜன், (25.)திரு.ஜா.ஜெரால்டு, (26.)திருமதி.கி.கங்கா பரமேஸ்வரி, (27.)திருமதி.து.செல்வி, (28.)திரு.ஜோசப் சந்திரசேகர் (29.)திருமதி.ஆ.செண்பகவல்லி, (30.)திரு.ச.மாரியப்பன், (31.)செல்வி.பொ.செல்வசுபா, (32.)திரு.மு.மாரியப்பன், (33.)திரு.செ.ரீகன், (34.)திரு.ம.பிரவின்குமார், (35.)திரு.ஜெ.டேனியல் ஜெகன், (36.)திருமதி.சி.நாகசத்யா, (37.)திரு.க.சுப்புராமன் மற்றும் (38.)திரு.த.கணபதி ஆகியோர்கள் என் முன்பாக எழுதிக் கொடுத்த கடிதம் ஆகியவற்றையும் இத்துடன் இணைத்து மேற்படி கைப்பற்றப்பட்ட பணம், காக்கி கலர் கவர் ஒன்று மற்றும் கடிதங்கள் ஆகியவை தக்க மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- 02.11.2023, திரு.த.ஜெயகிருஷ்ணன், தலைமை உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. Sir, Received the complaint on today (02.11.2023) at 14.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.06/2023, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018 and 102 Cr.P.C Sd/- 02.11.2023, S.Peter Paul Durai, Deputy Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.த.ஜெயகிருஷ்ணன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி பொதுப்பணிகள் துறை செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து 01.11.2023-ம் தேதி மாலை 16.50 முதல் 02.11.2023-ம் தேதி அதிகாலை 01.00 மணி வரை தயார் செய்த செயல்முறைகள் மற்றும் (1.)திருமதி.மு.ஆனந்தி (2.)திரு.கா.பெரும்படையான், (3.)திரு.சு.சொர்ணமோகன், (4.)திரு.க.கருப்பையா, (5.)திரு.ந.கணேஷ், (6.)திருமதி.கி.சிவரஞ்சனி, (7.)திரு.சு.சங்கரநாராயணன், (8.)திரு.கு.வாசுதேவன், (9.)திரு.ஆ.சிங்காரவேல்,

(10.)திருமதி.ஆ.சாந்தி, (11.)திரு.ர.மாரிமுத்து, (12.)திரு.தி.சோமசுந்தரம், (13.)திருமதி.பா.முத்துசெல்வி, (14.)திருமதி.ஜெ.சுகுனா, (15.)திருமதி.சி.சித்ரா, (16.)திருமதி.மு.பாகம்பிரியாள், (17.)செல்வி.ஆ.சொர்ணரேகா, (18.)திருமதி.பி.ரத்னகலா, (19.)திரு.சு.சுஜித், (20.)திரு.சு.ஜெயவிஷ்வநாத் தினேஷ், (21.)திரு.ஆ.கேப்ரியல் ஜோசப் கிங்ஸ்டன், (22.)திரு.அ.ல.சுந்தரேசன், (23.)திரு.பா.முருகேஷ்குமார், (24.)திரு.ஜெ.நாகராஜன், (25.)திரு.ஜா.ஜெரால்டு, (26.)திருமதி.கி.கங்கா பரமேஸ்வரி, (27.)திருமதி.து.செல்வி, (28.)திரு.ஜோசப் சந்திரசேகர் (29.)திருமதி.ஆ.செண்பகவல்லி, (30.)திரு.ச.மாரியப்பன், (31.)செல்வி.பொ.செல்வசுபா, (32.)திரு.மு.மாரியப்பன், (33.)திரு.செ.ரீகன், (34.)திரு.ம.பிரவின்குமார், (35.)திரு.ஜெ.டேனியல் ஜெகன், (36.)திருமதி.சி.நாகசத்யா, (37.)திரு.க.சுப்புராமன் மற்றும் (38.)திரு.த.கணபதி ஆகியோர்கள் திரு.த.ஜெயகிருஷ்ணன் அவர்கள் முன்பாக எழுதிக் கொடுத்த கடிதம் ஆகியவற்றை இணைத்து மேண்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.M.சுதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

2.11.2023
S. Peter Paul Durai
Dy. Supdt. of Police,
VAC, Thoothukudi
Detachment.